1987 நவம்பர் 12]

அதற்குப் பக்கத்தில் உள்ள 500 கிணறுகளுக்குப் பாசன வசதி கிடைக்கிற வகையில் ஏற்பாடு செய்ய அரசு மீண்டும் முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய உணர்வைப் புரிந்து இருக்கிறோம். அவர்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொண்டு மறு ஆய்வு செய்து வேண்டிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

வசதி இல்லாத சிறிய மசூதிகளுக்கு மானியம்:

82— (*வினா எண். 9098)—**டாக்டர் த. முகம்மது சலீம் :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வசதி இல்லாத சிறிய மசூதிகளுக்கு அரசு எவ்வளவு மானிய பணம் கொடுக்கிறது ?

(ஆ) இதுவரை எத்தனை மசூதிகளுக்கு எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டு உள்ளது ?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் வசதி இல்லாத சிறிய மசூதிகளைப் புதுப்பிக்கவும், புனரமைக்கவும் ஒவ்வொரு மசூதிக்கும் ரூ. 15,000 வரை அரசு மானியம் வழங்கப்படுகிறது.

(ஆ) இதுவரை ரூ. 1,35,00,000 மானியம் கொடுக்கப்பட்டுள்ளது. இதனால் 2,362 மசூதிகள் செப்டம்பர் 1987 முடிய பயனடைந்துள்ளன.

டாக்டர் த. முகம்மது சலீம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது வழங்கப்படுகிற பணமானது போதுமானதாக இல்லாத காரணத்தினால், மேலும் இப் பணத்தை அதிகரித்து தர அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணம் அதிகமாக கொடுக்கிற நேரத்தில் பயன்படுகின்ற மசூதிகளின் எண்ணிக்கை குறைவாகும் என்ற உணர்வின் அடிப்படையில், பரவலாக எல்லா மசூதிகளும் இதனால் பயன் அடைய வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் தான் ரூ. 10,000லிருந்து ரூ. 15,000க்கு ஓரளவிற்கு உயர்த்திக் கொடுத்திருக்கிறோம்

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU
சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS